**செய்தி வெளியீடு** **நாள் : 14.2.2024**

**கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய செயல்பாடுகள் தொடர்பாகவும், பேருந்துகளின் இயக்கம் தொடர்பாகவும் முதல் வழிகாட்டுதல் குழுக் கூட்டம் (1st Steering Committee Meeting) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

******

அரசு தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி இன்று (14.02.2024) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய செயல்பாடுகள் தொடர்பாகவும், பேருந்துகளின் இயக்கம் தொடர்பாகவும் முதல் வழிகாட்டுதல் குழுக் கூட்டம் (1st Steering Committee Meeting) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிப்பது தொடர்பாகவும், இம்முனையத்தையொட்டி தேசிய நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடர்பாகவும், போக்குவரத்து நெரிசலை தவிர்க்க போக்குவரத்து காவல்துறையுடன் இணைந்து முறையாக பேருந்துகளை இயக்கி நெறிப்படுத்துதல் தொடர்பாகவும், தெற்கு ரயில்வே சார்பில் கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைக்கும் பணிகளை விரைவில் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவும், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் (CUMTA) சார்பில் தென் மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய அரசு போக்குவரத்துக் கழக (SETC & TNSTC) 4000 பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கும் “ஆரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு” என்னும் தலைப்பில் பேருந்து முனையத்தை சுத்தமாகவும், உடலை ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வு தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் அனைவருக்கும் வழங்குவது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) சிறப்பு அலுவலர் திரு.ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண்மை இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள், காவல் துணை ஆணையர்கள் (தாம்பரம் சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு.பவன் குமார், இ.கா.ப., அவர்கள், (தாம்பரம் போக்குவரத்து) திரு.ந.குமார் அவர்கள், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா துணை இயக்குநர் டாக்டர்.எச்.திலீப் குமார், இ.வ.ப., அவர்கள், தெற்கு ரயில்வே (கூடுதல் கோட்ட பொறியாளர் (ADEN), தாம்பரம்) திரு.எஸ்.புவனேஸ்வரன், SETC மேலாண் இயக்குநர் திரு.ஆர்.மோகன், தலைமை நிர்வாக அலுவலர் (ம) மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.பார்த்தீபன், SETC பொது மேலாளர் (இயக்கம்) திரு.குணசேகரன், MTC பொது மேலாளர் (இயக்கம்) திரு.செல்வன், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.சுரேஷ், கோட்ட பொறியாளர் திரு.செல்வகுமார், தேசிய நெடுஞ்சாலை (NHAI) துணை மேலாளர் திரு.பாவியா பாராசார், சி.எம்.டி.ஏ., செயற்பொறியாளர்கள் திரு.ராஜன்பாபு, திரு.பாலமுருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**